இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 06-11-2024

# அமித்ஷாவுக்கு எதனால் பயம்?

“பொது சிவில் சட்டத்தில் பழங்குடியினருக்கு விலக்கு” என்று உள்துறை அமைச்சர் அமித்ஷா சொல்லி இருக்கிறார். பழங்குடியினருக்கு விலக்கு என்றால், அது எப்படி ‘பொது’ சிவில் சட்டம் ஆகும்? ‘விலக்கு’ அளிக்கும் சட்டமாகத்தானே அது இருக்க முடியும்?

**“இந்த நாட்டில் தனித்தனி சட்டங்கள் கூடாது. அனைவருக்கும் பொதுவான சிவில் சட்டம்தான் இருக்க வேண்டும்” என்று நெஞ்சை நிமிர்த்திச் சொல்லி வந்த ‘இந்தியாவின் இரண்டாவது இரும்பு மனிதர்’ அமித்ஷா, எதற்காக பயப்படுகிறார்? தைரியமானவர் தானே? அனைவருக்கும் பொதுவான சட்டத்தில் பழங்குடியினருக்கு மட்டும் விலக்கு அளிக்கப் போகிறோம் என இறங்கி வர வேண்டிய தேவை என்ன வந்தது?**

ஜார்கண்ட் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் நடக்கப் போகிறது. பழங்குடி மக்கள் வாழும் மாநிலங்களில் ஒன்று ஜார்கண்ட். அதனால்தான் ஓட்டு வேட்டைக்காக பதுங்குகிறது பா.ஜ.க. ஜார்கண்ட் மாநிலத் தேர்தலுக்கான பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையை உள்துறை அமைச்சர் அமித்ஷா வெளியிட்டு இருக்கிறார். அப்போது பேசிய அமித்ஷா...

**“ஜார்கண்ட் மாநிலத்தில் பா.ஜ.க. ஆட்சி அமைத்தால் பொது சிவில் சட்டம் அறிமுகப்படுத்தப்படும். ‘பொது சிவில் சட்டம் பழங்குடியினரின் உரிமையையும் கலாச்சாரத்தையும் பாதிக்கும்’ என்று முதலமைச்சர் ஹேமந்த் சோரன் தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார். அது முற்றிலும் அடிப்படையற்றது ஆகும். பொது சிவில் சட்டத்திலிருந்து பழங்குடியினருக்கு முழு விலக்கு அளிக்கப்படும். பழங்குடியினர் உரிமைகள் எந்த வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்வோம்” என்று குறிப்பிட்டார்.**

பொது சிவில் சட்டத்தை ஜார்கண்ட் மாநிலத்தில் செயல்படுத்த விடமாட்டோம் - என்று முதலமைச்சர் ஹேமந்த் சோரன் தொடக்கத்திலேயே சொல்லி விட்டார். “ஜார்கண்ட் மாநிலத்தில் பொது சிவில் சட்டமோ, தேசிய குடிமக்கள் பதிவேடோ செயல்படுத்தப்படாது” என்று ஹேமந்த் சோரன் தொடர்ந்து சொல்லி வருகிறார். எனவே, தான் பா.ஜ.க. பதுங்குகிறது.

ஜார்கண்ட் என்றாலே காடுகள் அதிகம் உள்ள பகுதி என்பதுதான் பொருள். பட்டியல் பழங்குடி மக்கள் 28 விழுக்காடு இருக்கிறார்கள். பழங்குடி மக்கள் 12 விழுக்காடு இருக்கிறார்கள்.

பட்டியல் பழங்குடியினரில் இந்து சமயத்தினர் 67 விழுக்காடு உள்ளனர். இசுலாமியர் 14.53 விழுக்காடும், கிறித்துவர்கள் 4.30 விழுக்காடும் உள்ளனர். பழங்குடியினரில் சீக்கிய, சமண, பவுத்த மக்களும் இருக்கிறார்கள். இதையும் தாண்டிய மதங்களைச் சார்ந்தவர்களாக 12 விழுக்காடு மக்கள் இருக்கிறார்கள். எனவே பல்வேறு பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், கலாச்சாரங்கள், நெறிமுறைகள், சட்ட திட்டங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் மாநிலம் இது. ‘அனைவருமே பழங்குடியினர்’ என்று பொதுமைப்படுத்திவிட முடியாது.

பொதுசிவில் சட்டம் கொண்டு வரப் போகிறோம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன் பா.ஜ.க. அரசு சொன்ன போதே, **ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த 30க்கும் மேற்பட்ட பழங்குடி அமைப்பினர் சேர்ந்து எதிர்ப்பு தெரிவித்தார்கள். ராஞ்சியில் கூடிய ஆதிவாசி சமன்வாய் சமிதி என்ற கூட்டமைப்பு எதிர்ப்பு தெரிவித்தது. பழங்குடியினரின் உரிமைகள் அனைத்தும் பறிபோகும் என்று இவர்கள் சொல்லி இருந்தார்கள். நாகலாந்து, மிசோரம் மாநில மக்கள் இதனை எதிர்க்கிறார்கள். எனவே, பா.ஜ.க. என்ன நினைத்தாலும் பொது சிவில் சட்டத்தை கொண்டு வர முடியாது.**

ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடியினருக்கு நிலத்தகராறுகள் மற்றும் குடும்ப விவகாரங்களைத் தீர்ப்பதற்கு தனிச் சட்டம் இருக்கிறது. தனி நீதி மன்றமும் இருக்கிறது. ‘மங்கி முண்டா நியாய பஞ்ச்’ என்று இதற்குப் பெயர். ‘ஹோ’ என்ற பழங்குடியினர் மொழியில் மட்டுமே விவாதங்கள் நடக்கும். இதனை எந்த சூழலிலும் விட்டுத் தர மாட்டோம் என்று ஜார்கண்ட் பழங்குடி மக்கள் சொல்லி இருக்கிறார்கள்.

இந்தியா முழுவதும் 750 பழங்குடி சமூகங்கள் இருக்கின்றன. அதில் ஜார்கண்ட் மாநிலத்தில் மட்டும் 32 பழங்குடி சமூகங்கள் இருக்கின்றன. அவர்களது அனைத்து பழக்க வழக்கங்களும் சட்டங்களாக உள்ளன. இதனை யாரும் மாற்ற முடியாது. இசுலாமியருக்கு மட்டுமே தனிநபர் சட்டம் இருப்பதாக நினைப்பதே தவறானது ஆகும்.

இந்திய அரசியலமைப்பின் 371 ஆவது பிரிவின் கீழ் பல்வேறு இந்திய யூனியன் மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் xxi மற்றும் xxii பாகங்களில் காணக்கூடிய இந்திய அரசியலமைப்பின் பிரிவு 371 ஆவது பிரிவானது, நாட்டுக்குள் சில மாநிலங்களுக்கு பல தற்காலிகம் இடைநிலை மற்றும் விதிவிலக்கான விதிகளை வழங்குகிறது. இச்சட்டமானது குஜராத், மகாராஷ்டிரா, நாகலாந்து, மிசோரம், அசாம், ஆந்திரப்பிரதேசம், சிக்கிம், மணிப்பூர், அருணாசலப் பிரதேசம், கோவா, கர்நாடகா ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு ஏற்பாடுகளை வழங்குகிறது. இது அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 371 A முதல் 371 J வரையிலான பிரிவுகளாக அமைந்துள்ளது.

**இதற்கு என்ன காரணம் சொல்லப்படுகிறது என்றால்... ‘இந்த மாநிலங்களின் வளர்ச்சியடையாத பகுதிகளின் குறிப்பிட்ட தேவைகளை நிறைவேற்றுவது, அவர்களின் பொருளாதார மற்றும் பண்பாட்டு நலன்களைப் பாதுகாப்பது, உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்ப்பது, அவர்களின் வழக்கமான சட்டங்களைப் பாதுகாப்பது’ என்றே சொல்லப்படுகிறது. அதாவது அந்தந்த மாநிலங்களுக்காக சிறப்பாக உருவாக்கப்பட்ட சட்டப்பிரிவுகள் இவை. இந்த சிறப்புரிமைகளை பா.ஜ.க.வால் ரத்து செய்ய முடியாது. செய்தால் அந்த மாநிலத்தில் ஓட்டு வாங்க முடியாது.**

**எனவேதான், ‘பழங்குடியினருக்கு விலக்கு’ என்று பதுங்குகிறது பா.ஜ.க.. அப்படியானால் பொது சிவில் சட்டத்தை எதற்காக கொண்டு வரத் துடிக்கிறீர்கள்? இசுலாமியர்களைப் பழிவாங்குவதற்காக மட்டுமா? ஒரு குறிப்பிட்ட மதத்தினரைப் பழிவாங்க மட்டுமே கொண்டு வரப்படும் சட்டம் எப்படி ‘பொதுச் சட்டம்’ ஆகும்? அது சதிச் சட்டமாகத் தானே கருதப்படும்?!**




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில், கோயம்புத்தூர், விளாங்குறிச்சியில் 158 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பக் கட்டடத்தை திறந்து வைத்து, இக்கட்டடத்தில் பல்வேறு நிறுவனங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதற்கான ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் இரா.கண்ணன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### கோவையில் 468.89 ஏக்கர் நிலங்கள் 5386 குடும்பங்கள் பயனடையும் வகையில்

# நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, நவ. 6 -**

**தமிழ்நாடு வீட்டுவசதி திட்டத்திற்கான நிலமெடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் திரும்ப பெறப்பட்டதால் கோயம்புத்தூர் மாவட்டத்தில் 468.89 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுவிப்பு ஆணைகளை நில உரிமையாளர்களுக்கு வழங்கினார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2024) கோயம்புத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதல்வரின் முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில், வாரியத்திட்டத்திற்கானநிலமெடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் திரும்ப பெறப்பட்டதால் கோயம்புத்தூர் வடக்கு, கோயம்புத்தூர் தெற்கு மற்றும் பேரூர் வட்டங்களைச் சேர்ந்த கிராமங்களில் உள்ள 468.89 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கப்பட்டு, அதற்கான விடுவிப்பு ஆணைகளை நில உரிமையாளர்களுக்கு வழங்கினார்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை வழங்கப்பட்ட நிலங்கள், கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீண்ட காலமாக பொதுமக்கள் தடையின்மை சான்று கோரியும், நில எடுப்பிலிருந்து விலக்களிக்கக் கோரியும் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத இப்பிரச்சினை குறித்து அரசிடம் மனுக்கள் அளித்து வந்தனர்.

பொதுமக்களின் கோரிக்கை தொடர்பாக முதல்வரின் முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சிறப்பு புகார் பெட்டிகள் அமைக்கப்பட்டு, அதன்மூலம் மனுக்கள் பெறப்பட்டு வருகின்றது. அவற்றை பரிசீலித்து முடிவு எடுக்க வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி ஆணையம் மூலம் நில நிர்வாக ஆணையர் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டது.

குழுவின் கவனமான பரிசீலனைக்குப் பிறகு, தமிழ்நாடு முழுவதும் வீட்டுவசதி துறையினால் நிலமெடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட இனங்களில், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டத்தில் பயன்படுத்தாத 1141.68 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பு உத்தரவுகள் திரும்ப பெறுதல் தொடர்பான அரசாணை 4.10.2024 அன்று வெளியிடப்பட்டது.

இவ்வரசாணைபடி, கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தைச் சார்ந்த கணபதி, காளப்பட்டி, தெலுங்கு பாளையம், விளாங்குறிச்சி, கவுண்டம்பாளையம் ஆகிய கிராமங்கள், கோயம்புத்தூர் தெற்கு வட்டத்தைச் சார்ந்த உப்பிலிபாளையம் கிராமம் மற்றும் பேரூர் வட்டத்தைச் சார்ந்த வீரகேரளம், வடவள்ளி, குமாரபாளையம் கிராமங்களில் உள்ள 468.89 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விடுக்கப்படுகிறது. இதன் மூலம் 5386 குடும்பங்கள் பயனடைவார்கள்.

மேற்படி அரசாணையில் கண்டுள்ள புல எண்கள் மீது தமிழ்நாடு வீட்டுவசதி திட்டத்திற்கான நிலமெடுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் திரும்ப பெறப்பட்டுள்ளதால் அப்புலங்களுக்கான வருவாய்த்துறை, பதிவுத்துறை, மாநகராட்சி நகரமைப்பு பிரிவு, உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் இதர அரசு துறைகளில் விண்ணப்பங்கள் பெறப்படும்போது அந்தந்த துறைகளின் விதிமுறைகள், அரசாணைகள் மற்றும் வழக்கமான அலுவலக நடைமுறையை பின்பற்றி மேல் நடவடிக்கையினை தொடர அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட புல எண்களுக்காக இனி வீட்டுவசதி வாரியத் திடம் இருந்து தடையின்மை சான்று பெறத்தேவையில்லை.

இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ. வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கிராந்திகுமார் பாடி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஒன்றிய பா.ஜ.க. உள்துறை அமைச்சர் அமித்ஷா ஜார்கண்ட் மாநிலத் தேர்தல் பிரச்சாரத்தில், “ ஜார்கண்ட் மாநிலப் பெண்கள் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தப்பட்டால், தலைகீழாகத் தொங்க விடப்பட்டுத் தூக்கில் இடப்படுவார்கள்” என்று கூறியிருக்கிறாரே?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி; வரவேற்கத்தக்க தண்டனை தான். எனினும் பா.ஜ.க. முன்னாள் எம்.பி. பிரிஜ் பூஷன், இந்திய மல்யுத்தக் கூட்டமைப்பின் தலைவராக இருந்து, மல்யுத்தச் சிறுமிகளைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியது குறித்து நாடே கொந்தளித்தது. அது தொடர்பாக மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் முன்னெடுத்த கண்டனமும் எதிர்ப்பும், உலக அரங்கில் எதிரொலித்தது. ஆனால் பா.ஜ.க. அரசு அந்தப் பாலியல் குற்றவாளியை இதுவரை பாதுகாத்து வருகிறது. அமித்ஷா குறிப்பிட்டுள்ள கடும் தண்டனை பிரிஜ் பூஷனுக்குப் பொருந்தாதா ?**

**“ ஏதிலார் குற்றம்போல் தம் குற்றம்” காணும் நேர்மையிலிருந்து பா.ஜ.க.வுக்கு மட்டும் விதிவிலக்கோ ?**